1979 மார்ச் 31]

## மறுவாழ்வு இல்லங்களில் துவக்கப் பள்ளிகள்.

*வினா எண் 558—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) அரசு மறுவாழ்வு இல்லங்களில் உள்ள ஏழைகளின் குழந்தைகள் கல்வி வசதி பெற இல்லங்களில் தனியாக துவக்கப் பள்ளிகள் ஆரம்பிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசினிடம் உள்ளதா?

(ஆ) தற்சமயம் அந்த குழந்தைகள் எப்படி கல்வி வசதியை பெறுகிறார்கள்?

மாண்புமிகு செல்வி பி.டி. சரஸ்வதி : (அ) இல்லை.

(ஆ) இல்லவாசிகளின் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பும் வயது வந்த எல்லா குழந்தைகளையும் இல்லங்களின் பக்கத்திலிருக்கும் அரசு அல்லது தனியார் மற்றும் அனாதை பள்ளி மற்றும் மதச்சார்புள்ள பள்ளிகள் முதலியவற்றில் சேர்க்கப்படுகின்றனர்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவர் அவர்களே, இந்த இல்லங்களை கிராமத்தை விட்டு தூரத்தில் கட்டியிருக்கிறார்கள். என் தொகுதியில் மல்லவாடி என்ற இடத்திலுள்ள இல்லத்திலுள்ள குழந்தைகள் பள்ளிக்கூடத்திற்குப் போவதற்காக நீண்டதூரம் செல்லவேண்டியிருக்கிறது. அதேநேரத்தில் கிராமங்களிலுள்ளவர்களும் ஆட்சேபிக்கிறார்கள். ஆகவே இப்பேர்பட்ட இல்லங்களில், தனியாக குழந்தைகள் படிப்பதற்கு அங்கேயே வசதி செய்து கொடுக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு செல்வி பி.டி. சரஸ்வதி : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த இல்லங்களில் மறுவாழ்வு பெற்ற தொழு நோயாளிகள் இருக்கிறார்கள். ஆகவே இக்குழந்தைகள் படிக்கின்ற பள்ளிக்கூடங்கள் சற்று தூரத்தில் இருப்பதுதான் நல்லது என்று கருதித்தான் இவ்வாறு அமைக்கப்பட்டிருக்கிறது.

திரு. பெ. சு. திருவேங்கடம் : இந்தக் குழந்தைகள் பெற்றோர்களுடன் இந்த இல்லங்களில் தான் தங்கி வருகின்றன. ஆகவே இந்த இல்லங்களிலேயே ஒரு பக்கத்தில் குழந்தைகள் படிப்பதற்காக பள்ளியை துவக்கலாம். இதை அரசு யோசிக்குமா?

மாண்புமிகு செல்வி பி.டி. சரஸ்வதி : இது பற்றி செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனைக்கு கொண்டு வரப்படவில்லை.